# வாழைமரம்

வாழையடி வாழையாக வளரக் கூடியவை வாழைமரம். வாழைமரம் போலித்தண்டு உடைய செடியாகும். வாழையின் தண்டு, கிழங்கு வடிவில், மண்ணுக்கு அடியில் வளர்கிறது. புதிய வாழைக் கன்றுகள் கிழங்கிலிருந்தே தோன்றுகின்றன. வாழை, விதை வழியாக தோன்றல் அரிது.

**வாழைக் கன்று**



பூமிக்கு வெளியில் தெரியும் வாழைத் தண்டானது, வாழையின் அடிப்பகுதிகள் ஒன்றின் மேல் ஒன்று சேர்ந்து உருவான பகுதியாகும். வாழைமரத்தில் உள்ள அனைத்து பாகங்களும், பயன்படக்கூடியவை.


www.kids.noolagam.com



## வாழைத்தண்டு

தமிழ்நாட்டில் வாழை இலையில் தான் விருந்து உண்பர். வாழைமரத்தின் பூ துவர்ப்புச் சுவை வாய்ந்தவை. வாழைப்பூ அடுக்கடுக்கான பூங்கொத்துகளாக இருக்கின்றன. வாழைமரத்தில் காய்க்கும் வாழைக்காய் சமைப்பதற்குப் பயன்படுகின்றன. வாழைச் செடியிலிருந்து ஒரு வாழைக்குலை தோன்றுகிறது. வாழைக்காய் பழமாக மாறியபின் இனிப்பு சுவையுடைய வாழைப்பழம் கிடைக்கிறது.



## வாழை இலை



## வாழைப்பூ

ஒவ்வொரு வாழைத் தாரிலும் 3 முதல் 20 அடுக்குகளில் 60 முதல் 200 பழங்கள் வரை உள்ளன. ஒவ்வொரு அடுக்கு பழங்களும் வாழைப்பழச்சீப்பு என அழைக்கப்படுகிறது. வாழைமரம் இந்தியா,பிரேசில் போன்ற மித வெப்ப நாடுகளில் பயிரிடப்படுகிறது.

## வாழைப்பழத்தின் வகைகள்:-

1. செவ்வாழை,
2. மலை வாழை,
3. ரசுதாளி வாழை,
4. பச்சை வாழை,
5. மொந்தன் வாழை,
6. நேந்திர வாழை,
7. கதலி வாழை,
8. கற்பூரவல்லி வாழை,
9. பூவன் வாழை,
10. பேயன் வாழை.

## வாழைப்பழங்கள்



## வாழையின் பயன்கள்:-

வாழைக்காய், வாழைப்பூ மற்றும் வாழைத்தண்டினைக் கொண்டு உணவு பதார்த்தங்கள் செய்ய பயன்படுகின்றன. வாழைப்பழம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பிடித்த பழமாகும். திருமண இல்லங்களில் வீட்டின் முன் தோரணமாக வாழைமரத்தைக் கட்டுவார்.

## வாழைமரம்

